Registered as a Newspaper　பக்கங்கள் 04　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 04　திருவள்ளுவர் ஆண்டு 2025　மாசி 1　(13.02.94)　ஞாயிற்றுக்கிழமை　ஓசை 360

## முதன்மை ஆசிரியர்கள் வெற்றிட விபரம் அறிவிப்பு

யாழ்ப்பாண கல்வி வலயம் இரண்டில் உள்ள முதன்மை ஆசிரியர் பதவிகளுக்கான வெற்றிடங்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. பருத்தித்துறை, மருதங்கேணி கோட்டத்தில் தமிழ் பாடத்திற்கும் சமூகக்கல்வி, கணிதம், ஆரம்பக்கல்வி ஆகிய வற்றிற்கு தலா ஒவ்வொரு வெற்றிடமும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது; இதே சமயம் தெல்லிப்பழை கோட்டத்தில் ஆங்கிலப் பாட முதன்மை ஆசிரியர் பதவிக்கு ஒரு வெற்றிடமும் கோப்பாய் கோட்டத்தில் மனையியல் பாடத்திற்கான முதன்மை ஆசிரியர் பதவிக்கு ஒரு வெற்றிடமும் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 18ஆம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி டி. பி.யை பதவி கவிழ்க்க ஐ. தே. கட்சிக்குள் சதி நடவடிக்கை!

## புலனாய்வு அறிக்கைகள் கிடைத்தன

[கொழும்பு]

சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை, ஜனாதிபதி பதவியில் இருந்தும் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் அகற்றிவிட ஐ. தே. கட்சியில் உள்ள சிலர் சதி நடவடிக்கையில் ஈடுபடுவதாக சிறீலங்கா புலனாய்வுத் துறைக்கு தகவல்கள் எட்டியுள்ளன. இத்தகவல்கள் புலனாய்வுத் துறையினரால் டி. பி. விஜேதுங்காவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் பி. பி. ஸிக்குத் தெரிவிக்கையில்; சிறிலங்காவின் ஜனாதிபதி திரு. டி. பி விஜேதுங்காவைக் கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் ஜனாதிபதி பதவியிலிருந்தும் விலக்க ஐக்கியதேசியக் கட்சியில் உள்ள ஒருபிரிவினர் சதி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் இது குறித்த இரகசியத் தகவல்கள் புலனாய்வுப் பிரிவினர் மூலம் ஜனாதிபதிக்கு தற்போது கிடைத்துள்ளது. இதனை அடுத்தே ஜனாதிபதி பிரேமதாசா கொலை கொண்டாடியவர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தனது ஆதரவாளர்களை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றார்.

எதிர்வரும் ஜனாதிபதித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'ராக்கிங்' புரிந்தோருக்கு எதிராக நடவடிக்கை

### உதவிப் பணத்தில் வெட்டு

(யாழ்ப்பாணம்)

புதிய மாணவர்கள் மீது துன்புறுத்தலில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது துணைவேந்தர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு துன்புறுத்தலில் (ராக்கிங்) ஈடுபட்ட மாணவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேற்படி நடவடிக்கை பல்கலைக்கழக சட்ட விதிகளுக்கு முரணானது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் வழங்கப்படும் உதவிப் பணத்தில் 1000 ரூபா குற்றப்பணமாக அறவிடப்படும் என்றும், எதிர்காலத்தில் இவ்வாறு நடந்து கொண்டால் பல்கலைக் கழகப் பதிவு இரத்துச் செய்யப்படும் என்றும் உபவேந்தர் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

சுமார் பதினெட்டு மாணவர்கள் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

## முன்னாள் அமைச்சர் வீட்டில் பொலிஸ் நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய சோதனை நிலையங்களை படையினர் திறந்துள்ளனர். செங்கலடியில் முன்னாள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தேவநாயகம் வீட்டில் புதிதாக ஒரு பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

## மீனவர்மீது கடற்படை துப்பாக்கிப் பிரயோகம்

## தென்மாகாண தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கொலை செய்யப்பட்டதை கேள்விப்பட்டதும் வெடி கொளுத்தி மகிழ்ந்த இருவர் தென் மாகாணசபையில் பலப்பிட்டிய தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை பிரேமதாசாவின் நெருங்கிய ஆதரவாளராக இருந்த பாராளுமன்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

## உட்கட்சி முரண்பாடு அதிகரிப்பு; பிளவுபடும் நிலையில் ஐ.தே.க.

சிறிலங்காவில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடும் நிலை உருவாகி வருவதாக 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். தென்மாகாண சபையின் தேர்தல் பிரசாரங்களுக்கென ஐக்கிய தேசியக் கட்சி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சிறிசேன குரே ஆகியோரை நியமித்திருந்தது தெரிந்ததே.

தற்போது சிறிலங்கா ஜனாதிபதிக்கு இவ்விருவர் மீதும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்தே இவ்விருவரையும் பிரசார வேலைகளிலிருந்து நீக்கிவிட்டு முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல், ஒசி அபேகுணசேகர ஆகியோரிடம் பிரசார வேலைகளை ஒப்படைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை அடுத்து கட்சிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தென் மாகாணசபைத் தேர்தல்

## மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பிரிட்டன் அரசினால் யாழ். போதனா மருத்துவமனைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட 200 கிலோவாற்று மின்பிறப்பாக்கி நேற்றுவைபவரீதியாக இயக்கிசேவையில்ஈடுபடுத்தப்பட்டது.

மேற்படி நிகழ்வில் மருத்துவமனை பணிப்பாளர், நிர்வாக அலுவலர் ஆகியோரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## 3 கொள்ளையர் கைது

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகர சபை அலுவலகத்தை உடைத்து அங்குள்ள பொருள்களை கொள்ளையடித்த மூவர் வல்வெட்டித்துறை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு பழனிவேல், பொன்னுத்துரை

(4ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிப் பிரயோகம்

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது வலந்தலைச்சந்தி காவல் நிலைகளிலிருந்து நேற்றுக்காலை 5-45 மணியளவில் பொன்னாலைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இச் சம்பவத்தில் மீனவர் எவரும் காயங்கள் எதுவும் இன்றி தப்பித்துக்கொண்டனர்.

மேலும் இதேதினம்காலை 6 மணியளவில் மாதகல், சுழிபுரம் கடற்பரப்பில் விசைப் படகுகளில் ரோந்து வந்த சிறிலங்கா கடற்படையினர் சுழிபுரம் திருவடிநிலைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களைநோக்கி சரமாரியாக கலிபர் வேட்டுக்களை தீர்த்தனர். ஆயினும் உயிர்ச்சேதம் எதுவுமின்றி மீனவர்கள்தப்பித்துக்கொண்டனர் என மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 11ஆம் திகதி இரவு 9-35 மணியளவில் காரைநகர் இராணுவ நிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

காணசபையில் பலப்பிட்டிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தின் பாதை நீண்டதாகவுள்ளது

### - கென்னத் பெர்னாண்டோ

(யாழ்ப்பாணம்)

"சமாதானத்திற்கான பாதை நீண்டதும் மிகவும் கடினமானது மாகத்தென்படுகிறது. இவ்வாறான பாதைகளினூடாக சமாதானத்தை அடைவதற்கு நாம் அனைவரும் உழைக்கவேண்டும்" இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது நான் இம்முறை யாழ்ப்பாணம் வந்த போது எனக்கு அனைத்து தரப்பில் இருந்தும் வரவேற்புக்கிடைத்தது.

என்னைச் சந்தித்த அனேகமானோர் சமாதானமும் துன்பதுயரங்களில் இருந்து விடுதலையும் எப்போது எமக்கு கிடைக்கும் என்று என்னிடம் கேட்டனர். இங்கு வாழும் மக்கள் சுதந்திர உணர்வுமிக்கவர்களாககாணப்படுகின்றனர். மொழி ரீதியாகவும் கலை கலாசார ரீதியாகவும் சுதந்திரஉணர்வு கட்டி வளர்க்கப்பட வேண்டும். அப்போது தான் அது உண்மையான சுதந்திரமாக இருக்கும் இத்தவகையில் மக்களது சுதந்திர உணர்வுகள் மறுசீரமைக்கப்படவேண்டும் என்றார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் வலிமை இராணுவத்திற்கு பதிலடிதரும்

### லங்கா கார்டியனில் மேர்வின் டி சில்வா

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், கடற்படையினருக்கும் பதிலடி கொடுக்கக்கூடிய வலிமையைப் பெற்றிருப்பதாக லங்கா கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் மேர்வின் டி சில்வா கூறியுள்ளார். ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவதன்மூலம் சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளைத் தேர்தலில் பெறமுயல்கின்றார்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவியும், சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க உள்ளூர் ஆட்சித் தேர்தல்கள் தொடர்பாக தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதான சூழல் ஒன்றை உருவாக்க முயல்கின்றார்.

எனினும் இது போன்ற நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளை திருப்திப்படுத்தப் போவதில்லை எனவும். விடுதலைப் புலிகள் சிறிலங்காவின் வான்படை ஒன்றைத் தவிர ஏனைய படையினரை சமாளிக்கும் வலிமையுடையவர்களாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# அதிவேக ரோந்துப் படகு கடற்படையில் இணைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா கரையோரக் கண்காணிப்பு சேவைக்கு டொக்யார்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட அதிவேக ரோந்துப் படகு ஒன்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சமரசேகராவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

சிறிலங்கா கரையோரக் கண்காணிப்பு சேவையில் சேர்க்கப்பட இருந்த நான்கு அதிவேகப் படகுகளில் ஒன்றே மேலே குறிப்பிட்ட படகு ஆகும். இந் நான்கு அதிவேகப் படகுகளில் இரண்டு 36 கோடி ரூபா செலவில் கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் தயாரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒப்படைக்கப்பட்ட முதலாவது அதிவேகப் படகு பிரான்ஸ் நாட்டு உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டொக்யார்ட் நிறுவனத்தின் 20 அதிகாரிகள் பிரான்சில் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்தகைய அதிவேக ரோந்துப் படகை தயாரிப்பதில் இவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

# 7கோடி 50லட்சம் காப்புறுதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பூநகரித் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 7 கோடியே 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கூட்டுத்தாபனத் தலைவர் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

# தென் மாகாணசபைத் தேர்தல் புதிய சகாப்தத்தை உருவாக்கலாம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள தென் மாகாணசபை தேர்தல் சிறிலங்கா அரசியலில் ஒரு புதிய சகாப்தமாக அமைய இருப்பதாக கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

அதாவது சிறிலங்காவில் எதிர்காலம் இத் தேர்தலை மையமாகக் கொண்டே செயற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தென் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தோல்வி ஏற்படும் சமயம் ஜனாதிபதி தேர்வு செய்யும் முறை, மற்றும்ஜனாதிபதியை மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும் எனவும், ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடையுமாயின் அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி உடைந்து விடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# விடுதலைப்புலிகள் குறித்து டி, பியின் புதிய திட்டம்

(கொழும்பு)

விடுதலைப்புலிப் பயங்கரவாதிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவரவும் தேர்தலில் பங்கு பற்றும் வகையில் அவர்களுக்கு உற்சாகம் அளிக்கவும் தாம் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் புதிய தபாலகம் ஒன்றை நேற்று திறந்து வைத்து அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார். நாட்டின் பாதுகாப்பிற்காக அரசு 2,500கோடி ரூபாவை வருடாந்தம் செலவிடுகிறது. இந்தச்செலவுநாட்டுக்கு பெரும் சுமையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் இந்து குருமார்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து குருமார் ஒன்றியத்தைச்சேர்ந்த இந்து குருமார்களை நேற்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் சந்தித்தனர். நேற்று மாலை நடைபெற்ற இச் சந்திப்பு ஒருமணி நேரம் நீடித்தது.

இச் சந்திப்பில் சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பான புலிகளின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தப்பட்டது. இந்த இந்துமத குருமார் ஒன்றியம் தென்னிலங்கை சென்று அங்குள்ள மதத்தலைவர்களுக்கு தமிழீழ நிலை குறித்து எடுத்து விளக்கவுள்ளனர்.

இந்த மத குருமார்களுடனான சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெண்ணை தாக்கியவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

(வடமராட்சி)

புலோலி மேற்கைச்சேர்ந்த சகோதரர்கள் இருவர் அதே இடத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக்குவேண்டுமென்றே அடித்து காயம் இழைத்த குற்றத்திற்காக பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சின்னத்தம்பி சிவலோகநாதன், சின்னத்தம்பி சிவகுமார் ஆகிய இருவரும் லிராணி என்ற பெண்ணை அடித்து காயம் ஏற்படுத்தினர்.

காயம் ஏற்படுத்திய இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு சமாதானமாக செல்ல விரும்பியதினால் நீதிமன்று குற்றம் இழைத்த இருவரையும் தலா 250 ரூபா குற்றப் பணம் செலுத்துமாறு கட்டளையிட்டது.

(ப ர)

## வரி விளம்பரம்

### சனிமாற்றம் 11-2-1994

ரூ10|-புதியவெளியீடுளங்கும் விற்பனையாகின்றது; பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள், அலுவலக உபகரணங்கள் கிடைக்குமிடம் சோபிதா புத்தகசாலை, கே: கே: எஸ் வீதி. யாழ்ப்பாணம்; (7506)

### தவறி விட்டது

4-2-1994 அன்று சங்கானை பழைய தபாற் கந்தோர் வீதியிலிருந்து மானிப்பாய்- நல்லூர் கோவில் வீதி வழியாக திருநெல்வேலி புனித சவேரியார் கோவிலிற்குப் போகும் போது, கொழும்பில் கண் சோதித்து எடுத்த மூக்குக் கண்ணாடி கவருடன் தவறிவிட்டது; தயவு செய்து கண்டெடுத்தவர்கள் சங்கானை தபாற் கந்தோரில் அல்லது ஈழநாதம் பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; சன்மானம் வழங்கப்படும் (7505)

### பழைய சாக்கு, பை விற்பனை

எமது தொழிற்சாலையில் பழைய சாக்கு, உரப்பை என்பன விற்பனைக்கு உள்ளது; வாங்க விரும்புவோர் பார்வையிட்டுக் கூறுவிலையை 18-02-1994 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்; பொது முகாமையாளர்; யாழ்: மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-8615)

### அரைத்த உப்பு கொள்வனவு

எமது தொழிற்சாலைக்கு சுத்தமான அரைத்த உப்புத் தேவையாக உள்ளது; தொகையாக வழங்கக் கூடியவர்கள் உடன் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்; பொது முகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி; (சி-8614)

### மணப் பெண் தேவை

பிரான்சில் நிரந்தர வேலை செய்யும் கத்தோலிக்கரான 38வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை; மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்; (7509)

## பாலர்பாட மாணவருக்கு இலவச புத்தகம் விநியோகம்

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறார்களுக்கு பாடப்புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன;

மானிப்பாய் பட்டினத்திலும், பண்டத்தரிப்பு பிரான்பற்றுக் கிராமத்திலும் இயங்கி வரும் மேற்படி பிரதேச சபையின் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் சிறார்களுக்கு 7500 ரூபா பெறுமதிவாய்ந்த பாடப்புத்தகங்கள் இலவசமாக சபையினரால் வழங்கப்பட்டுள்ளன; இந்த தர்ம அடிப்படையிலான கல்விச் சேவையினால் பல வறிய குடும்பங்களைச் சார்ந்த சிறார்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்; (41)

## 95-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
24.10.1977

வீரச்சாவு
11.11.1993

### வீரவேங்கை இளவரசன்

(பேரின்பநாயகம் றஞ்சிதறாஜ்)

தானைத் தலைவனின் பாசறையில்
தம்பியாக உதித்தவனே!
எதிரிகளின் பாசறையை எமதாக்கி- பூநகரிதனிலே
புலியாகி புற நானூறு படைத்தவனே!
நீ மறையாமல் என்றும் வாழ்வாய்
தமிழர் தம் மனங்களில்!

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- குடும்பத்தினர்.
பேரின்பநாயகம்
(சின்ராஸ்)

மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை;

(7453)

## 95 ஆம் நாள் கண்ணீர் மழையினிலே..



## நினைவு கூருகின்றோம்.. 1994-02-13

1985ஆம் ஆண்டில் இதேதினத்தில் மணலாறு - கொக்கிளாய் சிறிலங்கா ராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்டதாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**லெப். சைமன்** (கனகரத்தினம் ரஞ்சன் - பொதுவில் - அம்பாறை)
**கெனடி** (கனகசபை விக்வராசா - கிரான் - மட்டு)
**காந்தருபன்** (பொன்னையா சந்திரகுமார் - கல்லடி - மட்டு)
**ஜெகன்/இடி அமீன்** (சண்முகராசா பிரபாகரன் - லிங்கநகர் - திருமலை)
**காந்தி** (கந்தையா பரமேஸ்வரன் - தம்பலகமம் - திருமலை)
**ரவி** (நமசிவாயம் தர்மராசா - செம்மலை, அளம்பில் - மணலாறு)
**வேதா** (கனகு இராசநாயகம் - சங்கத்தடி, கண்டாவளை - கிளி)
**ரஞ்சன் மாமா** (பொன்னையா சண்முகநாதன் - கண்டாவளை - கிளி)
**காத்தான்** (துரைச்சாமி சிறீமுருகன் - இல 54, குமரபுரம் - கிளி)
**லெப். பழகு** (முதுதுகொடுவ உடுகமகே கேமசிறி - கடற்கரைவீதி, பருத்தித்துறை - யாழ்)
**மயூரன்** (குணசிங்கராசா துவாரகன் - மீசாலை தெற்கு, சாவகச்சேரி - யாழ்)
**சொனி** (சதாசிவம் அன்ரனி - நுணாவில் மேற்கு, சாவகச்சேரி - யாழ்)
**தனபாலன்** (தியாகராசா வரேந்திரன் - காரைநகர் - யாழ்)
**சங்கரி** (செல்லமாணிக்கம் பாலசுந்தரம் பாலகணேஷ் - சப்பலுடையார் கோயிலடி - வல்வெட்டித்துறை)
**மகான்** (கதிரவேலு செல்வராசா - கம்பர்மலை, வல்வெட்டித்துறை - யாழ்)
**நிமால்** (கந்தையா ஜெயந்தன் - தும்பளை, பருத்தித்துறை - யாழ்)

1986ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். தேவா** (சிவராசலிங்கம் சிவகுமார் - பாலம்பிட்டி, மடுக்கோயில் மன்னார்)

வவுனியா பூவரசங்குளப் பகுதியில் எதிர்பாராத விதமாக சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**சிவா** (வவுனியா)

1987ஆம் ஆண்டு கிளி - உருத்திரபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**செல்வம்** (சங்கரப்பிள்ளை லோகநாதன் - மாதர் பணிக்கர் மகிழங்குளம் - வவுனியா)

1988ஆம் ஆண்டு மட்டு - பாவற்கொடிச்சேனை பகுதியில் எமது முகாமொன்றின்மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம லெப். சூரி** (கணபதிப்பிள்ளை தவராசா - சந்திவெளி - மட்டு)

1989ஆம் ஆண்டு யாழ் - ஊர்காவற்றுறைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வில்லியம்** (மாணிக்கம் குமார் - சேந்தான்குளம் - வவுனியா)

யாழ் - வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு வீட்டுடன் சேர்த்து எரிக்கப்பட்ட தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் எதிர்பாராத

## பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

லொறி உரிமையாளர்களுக்கு,

### லொறி வாடகைக் கூலிக்கான கேள்விப் பத்திரம்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், சங்கானை தனது 1994ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடும் களஞ்சியங்களிலிருந்து பொருட்களை ஏற்றியிறக்குவதற்கு லொறிச் சொந்தக்காரரிடமிருந்து வாடகைக் கூலிக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 21-2-1994 ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளரிடம் சேர்ப்பித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| சங்கானை | - | குருநகர் அரசகளஞ்சியம் |
| யாழ்ப்பாணம் | - | குருநகர் அரசகளஞ்சியம் |
| சங்கானை | - | யாழ்ப்பாணம் (மனோகராச்சந்தி) |
| சங்கானை | - | கோண்டாவில் புகையிரதநிலையம் |
| யாழ்ப்பாணம் | - | கோண்டாவில் புகையிரதநிலையம் |
| சங்கானை | - | பருத்தித்துறை துறைமுகம் |
| சங்கானை | - | சாவகச்சேரி சந்தி |
| யாழ்ப்பாணம் | - | சாவகச்சேரி சந்தி |

குறிப்பு:- 1. வாடகைக்கான கூலி கிலோமீற்றரில் குறிப்பிடப்படல் வேண்டும்,
2. ஒரே தடவையில் 10.000 கிலோ பொருட்கள் ஏற்றக்கூடியதானவாகனம்

பொது முகாமையாளர்.
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ; சங்கம்.
சங்கானை.
(சி-8610)

## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14-வது இசைவிழா

### 2-ம் நாள் 13.2.94 ஞாயிற்றுக்கிழமை

'யோகாஸ் பிடவை மாளிகை' ஆதரவில்

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**

என்; ராஜன், என். பரந்தாமன், எஸ். கதிரமலை, எம். சம்பந்தன் — நாதஸ்வரம்
ரி. சுந்தரலிங்கம், எம். சுதா, ரி. கணேசன், எம். ராஜேந்திரம், ரி. ராஜேந்திரம் — தவில்
ஜி. மகேந்திரன்

**5.00 - 5.20 பாட்டு**

என்; சுகிர்தா, என். சுகன்யா, ரி. தர்மினி, ரி. காயத்திரி, கே. தர்ஷினி, கே. மயூரி, எம். நர்மதா — பாட்டு
எஸ். சுகன்யா - வயலின்
யூட் ஜெமில்ராஜ் - மிருதங்கம்

**5.20 - 5.40 வீணை இசை**

பஞ்சமூர்த்தி வஸந்தா, கானமூர்த்தி காயத்திரி, புஸ்பராஜா சுஜீபா — வீணை

பிரான்சில் நிரந்தர வேலை செய்யும் கத்தோலிக்கரான 38வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (7509)

### திருமண சேவை

பொருத்தமான மணமகன் / மணமகள் எம்மிடம் உண்டு. தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். (7510)

### ஒலிபெருக்கி

ஒலிபெருக்கி, அம்பிளிவயர், புறஜெக்ரர் விற்பனைக்குள்ளது: ''மில்க்வைற்'
(சி-8617)

### புவியியல் ஆசிரியர் தேவை

யா / புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு க. பொ. த. (உ / த) வகுப்பிற்கு புவியியல் கற்பிக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியர் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் வரவும். அதிபர் யா / புங்குடுதீவு ம. வி. (யூனிவேர்சல் கல்வி நிலையம்) கந்தர்மடம். (7496)

## குளம் பெருக்கெடுப்பு

அநுராதபுரம் பகுதியில் பெய்துவரும்பெரும் மழையின் காரணமாக பல பெரியகுளங்கள் பெருக்கெடுத்துள்ளன.

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 8, 9, 11-இல் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கானசேவைக்காலப் பயிற்சி வகுப்பு இன்று காலை 8 30 — 4.30 வரை நடைபெறவுள்ளது. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், யூனியன் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



## லெப்டினன்ட் மெய்யப்பன்

**[யோகராசா சுரேஸ்குமார் (கண்ணன்)]**

| மழலையாக: | மாவீரனாக: |
|---|---|
| 31-03-1971 | 11-11-1993 |

மெய்யப்பன் எனும்நாமம் மெய்யாகப் பொருந்தியதே
மெய்யானது எது என்று அறியவோ முற்பட்டாய்
தன்மானம் தனைக்காத்து தரணியிலே முன்நின்றாய்
தமிழ் மானம் தனைக்காக்க பேரணியில் முன்சென்றாய்
காளைப்பருவமது கண்ணன் சுரேஸ்குமார்—உந்தன்
கற்பனைக் கனவுயாவும் கனவாகிப் போனதென்ன
பெற்றதாய் உன்வரவை பெருமையுடன் நோக்கிநிற்க
பெரியதாய் உன்வரவை ஏங்கிஎதிர் நோக்கிநிற்க
களத்தினிலே தோளுயர்த்தி சென்றாய் மன்னா
ஈழத்தின் விடிவிற்கு வித்தான வீரா
தமிழ் ஈழத்தில் இன்னொருகால் வருவீரா கண்ணா!

கண்ணீர்த் துளிகளால் அஞ்சலி செய்யும்

அப்பா, அம்மா, அக்கா, அத்தான்,
தம்பி, பெரியப்பா, பெரியன்ரி,
சித்தி, மாமாமார், மற்றும்
சகோதரர்கள்.

சதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(7492)

தியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**விஸ்லியம்** (மாணிக்கம் குமார் - சேந்தான்குளம் - வவுனியா)

யாழ் - வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு வீட்டுடன் சேர்த்து எரிக்கப்பட்ட தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமை பிரிந்த

**அற்புதன்** (கிஞ்சல் புகாரி டெனின் - சிலாவத்தை முல்லைத்தீவு)

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் 2-வது நாளாக சிறிலங்கா, இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் ஜோன்சன்** (இராசா இராஜேந்திரன் - பெரியகடை-திருமலை)

**ஆனந்தராஜ்** ( — ரமேசன் - வட்டுவாகல் - முல்லைத்தீவு)

**கப்டன் லெனின்** (செல்லத்துரை விக்கினேஸ்வரன் - பெரியகுளம் வீதி, மணலாறு)

**அலெச்சன்** (இரத்தினகோபால் செழியன் - 6-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - மணலாறு)

**முகுந்தன்** (செபஸ்ரியாம்பிள்ளை அமலதாஸ் - ஒட்டுத்தொழிற்சாலை - முல்லைத்தீவு)

**றிச்சாட்** (வல்லிபுரம் ஜெயரூபன் - புளியங்குளம் - முல்லைத்தீவு)

**அச்சுதன்** ( . . .. )

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ஜேசுதாஸ்** (அகஸ்ரின் அன்ரனி மெறைஸ்- வங்காலை - மன்னார்)

**பேபியன்** (செல்லையா பெனடிற் - பெரியபண்டிவிரிச்சான் - மன்னார்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்ட 4-ம் கொலனி, மத்திய முகாமைச் சேர்ந்த தமிழிளைஞன்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆசிரியரான வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு மட்டு - அலியார்ஓடைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். தேவா** (கிருஷ்ணபிள்ளை சிவானந்தராசா - சந்தை வீதி, கிரான் - மட்டு)

மட்டு - மணற்பிட்டிபகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ராம்ராஜ்** (சின்னத்தம்பி யோகராசா - மண்டூர் - மட்டு)

**ரவிராஜ்** (முருகேசு ரவி - திருப்பழுகாமம் - மட்டு)

மட்டு - குடும்பிமலைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அல்வின்-மதுராந்தகன்** (நடராசா இந்திரன்- கொடுவாமடு, செங்கலடி - மட்டு)

தென்தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த 05 தமிழர்கள், மற்றும் திருமலையைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

1993ஆம் ஆண்டு அம்பாறை - வவுணதீவுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சிவில் உடையில் சென்று எம்மவர்கள் மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தியபோது வீரச்சாவெய்திய -

**ஆனந்தசிலன்-ஆனந்** (மூர்த்தி மதன் - கொம்மாந்துறை - மட்டு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8611)

ரி. தாமினி, ரி. காயத்திரி
கே. தர்ஷினி, கே. மயூரி
எம். நர்மதா — பாட்டு

எஸ். சுகன்யா - வயலின்
யூட் ஜெமில்ராஜ் - மிருதங்கம்

**5,20 - 5.40 வீணை இசை**

பஞ்சமூர்த்தி வஸந்தா
கானமூர்த்தி காயத்திரி
புஸ்பராஜா சுஜீபா — வீணை

எஸ். துரைராஜா - மிருதங்கம்

**5.40 - 6.15 புல்லாங்குழலிசை**

தட்சாயினி லிங்கநாதபிள்ளை - புல்லாங்குழல்
எ. ஜெயராமன் - வயலின்
சதா வேல்மாறன் - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**

எம். ஸ்ரீரங்கநாதன் - பாட்டு
எஸ். வெங்கடேசசர்மா - வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**

1. திரு. என். பதிமகுமார் (யோகாஸ் பிடவை மாளிகை)
2. திரு. பாலசுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ்)
3. திரு. கலா - (சைமன் வர்த்தக நிலையம்)

அருளுரை: சோ. தண்டபாணிதீட்சிதர் பிரதமகுரு அம்பாள் கோயில் வல்வெட்டித்துறை
தலைவர்: நாதஸ்வர வித்துவான் வீ.கே. பஞ்சமூர்த்தி
பிரதம விருந்தினர்: கலாநிதி சபா ஜெயராஜா (தலைவர், இராமநாதன் நுண்கலைப்பிரிவு)
சிறப்பு விருந்தினர்: திரு. சி. புலேந்திரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

**7.30 - 8.30 இசைக்கச்சேரி**

எஸ். குமாரசாமி - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**

திருநெல்வேலி, பாரதி கலாமன்ற மாணவிகள்.
தயாரிப்பு: ஞானமணி செல்லையா.

**வாழ்த்துவோர் - மணியம் ஸ்ரோர்ஸ்**
பலாலி றோட், திருநெல்வேலி.

(சி-8605)

### சிந்தனைக்கு

அமைதி ஒழுங்கும், ஆதிக்கமின்மையும் இணையும் போதுதான் சமுதாயத்தின் உச்ச சிறப்பு நிலை வெளிப்படுகின்றது.

—பியேர் ஜொஸெஃப் ப்ருதோன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# திறந்த மனத்துடன் பரிசீலிக்கப்படுமா?

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதான ரீதியில் தீர்வுகாண தமது இயக்கம் தயாராகவே உள்ளது என கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் புலிகள் வெளிப்படையாகவே தெரிவித்து வந்துள்ளனர். அதனை மீண்டும் அண்மையில் யாழ். வந்த கிறிஸ்தவ மத நல்லெண்ணத் தூதுக் குழுக்களிடம் தெளிவாக வலியுறுத்தியும் உள்ளனர்.

இதேவேளை, பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் அவசியம் என்பதையும் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்தும் வற்புறுத்தியும் வருகின்றது. ஆனால், இப்போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடையும், விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சிற்கான நிபந்தனையாக முன்வைக்கவில்லை எனவும், இது சமாதானப் பேச்சுகள் தடங்கலின்றி, முன்னேற்றகரமாகவும், சுதந்திரமாகவும் நடைபெற அவசியம் என்பதன் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் தனதுநிலைப்பாட்டை விளக்கியுள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம், தமது இக் கருத்தை தெளிவாகக் கூறியிருந்தது. அதாவது, இராணுவ நடவடிக்கை, பொருளாதாரத் தடை என்பனவற்றுடன் கூடிய அழுத்தங்களுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையானது சுதந்திரமான பேச்சுவார்த்தையாக அமையமாட்டாது. அத்தோடு, அவை பேச்சுவார்த்தைகளில் அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடியவை. மேலும் பேச்சுவார்த்தையிலும், சமாதானத் தீர்விலும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் எனவும் விளக்கியிருந்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந்நிலைப்பாடானது, ஒரு யதார்த்த பூர்வமானதும், ஒரு சமாதானம் உருவாவதற்கு அடிப்படைத் தேவையானதும் என்பதில் எதுவித கேள்விக்குமே இடமில்லை. ஏனெனில், இவை இல்லாது போனால், பேச்சுவார்த்தை நம்பிக்கை தருபவையாகவும், முன்னேற்றகரமானவையாகவும் இருக்கப்

## ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியருக்குஊக்குவிப்புபடி

பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கும் நோக்குடன் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இவர்கள் பற்றிய விபரங்களை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் கோரி கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இவ் விபரங்களில் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி அல்லது விசேட சித்தி பெற்றோர் விபரம், க. பொ. த உயர் தரப் பரீட்சையில் திறமைச்சித்தி, விசேட சித்தி ஆங்கில மொழியில் பெற்றோர் விபரம், பொதுக் கலைத் தேர்வுப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றோர் விபரம், பட்டதாரிப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தி பெற்றோர் விபரம், ஆங்கில பாடத்தில் வெளிநாட்டில் டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்தோர் ஆகிய விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (17)

## யாழ். ச. ச. நிலைய சமாசம் நடத்திய கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

(கொழும்புத்துறை)

யாழ். சனசமூக நிலையங்களின் சமாசம் அண்மையில் இப் பகுதிச் சனசமூக நிலையங்களுக்கு இடையே நடாத்திய கலை இலக்கியப் போட்டி முடிவுகள் விபரம் பின்வருமாறு :-

கவிதைப் போட்டி:-

1-வது செல்வி கஜவதனி சிவரத்தினம் அரியாலை சரஸ்வதி ச. ச. நிலையம்.

2-வது ,, அன்ரனிற் அல்போன்ஸ் குருநகர் சென்றோக்ஸ் ச. ச. நிலையம்.

3-வது ,, ஜொயிரி கொலனிக்கா விக்ரர் குருநகர் சென்றோக்ஸ் ச. ச. நிலையம்.

பொது அறிவுப் போட்டி-:

1-வது திரு. வே. தபேந்திரன் குருநகர் சென்றோக்ஸ் ச. ச. நிலையம்.

2-வது ,, இ. ம. தினேஸ் மனோகரன் கொய்யாத் தோட்டம் ச. ச. நிலையம்.

3-வது செல்வி சி. கஜவதனி அரியாலை சரஸ்வதி ச. ச. நிலையம்.

சிறுகதைப் போட்டி-:

1-வது திரு. வி. எம். ஜெறாட் குருநகர் சென்றோக்ஸ் ச. ச. நிலையம்.

2-வது செல்வி அன்ரனீற்றா அல்போன்ஸ் குருநகர் சென்றோக்ஸ் ச. ச. நிலையம்.

3-வது செல்வன் கொ. அன்ரனக்குயின் குருநகர் தொடர்மாடி ச. ச. நிலையம்.

ஓவியப் போட்டி:-

1-வது செல்வி வி. சீதாலிறினம் குருநகர் சென்றோக்ஸ் ச. ச. நிலையம்

2-வது திரு. பத்மராசா கொழும்புத்துறை மேற்கு ச. ச. நிலையம்.

3-வது ,, து. குமனேந்திரன் அரியாலை ச. ச. நிலையம்

பேச்சுப் போட்டி:-

1-வது திரு. யூட் கிறேசியன் குருநகர் சென்றோக் ச. ச. நிலையம்

2-வது ,, கொ. அன்ரனக்குயின் குருநகர் தொடர்மாடி ச. ச. நிலையம்

கட்டுரைப் போட்டி:-

1-வது திரு. யூட் கிறேசியன் குருநகர் சென்றோக்ஸ் ச. ச. நிலையம்.

2-வது ,, அன்ரனக்குயின் குருநகர் தொடர்மாடி ச. ச. நி.

3-வது செல்வி மாலதி தர்மகுலசிங்கம் அரியாலை சரஸ்வதி ச. ச. நிலையம்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள்

### 1992இல் மட்டக்களப்பில் கைது

# நியூமகசீன், களுத்துறை சிறைகளில் 640 தமிழ் இளைஞர்கள் தவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டு மாவட்டத்தில் 1992 இல் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளபொது மக்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டுநியூமகசின், களுத்துறை சிறைச்சாலைகளில் மட்டும் 640 பேர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களது பெயர் விபரங்கள் சமாதானக் குழுவினால் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மட்டு மாவட்டத்தில் 08-01-92 முதல் 31-11-92 வரை கைது செய்யப்பட்ட 308 பேர் களுத்துறை சிறைச்சாலையிலும் 07-01-92 முதல் 01-12-92 வரை கைது செய்யப்பட்ட 332 பேர் நியூமகசின் சிறைச்சாலையிலும தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகச் சமாதானக் குழுவின் செயலாளர் செழியன் ஜே. பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார்.

## கடையில் திருட்டு

குருநகர், சின்னக்கடைப் பகுதியிலுள்ள புகைப்பட நிலையம் ஒன்றில் கடந்த வியாழன் திருட்டு நடாத்தப் பட்டிருப்பதாக யாழ். காவல்துறைப் பணிமனையில் புகார் செய்யப்பட்டுள்ளது.

புகைப்பட நிலையத்தின் கூரை ஓட்டைப்பிரித்து உள்ளிறங்கிய திருடர் மூன்று கமராக்கள் மற்றும் 21 பிலிம்ஸ் ரோல்கள், லென்ஸ் ரொக்கப்பணம் என்பனவற்றைத்திருடிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு - நயினாதீவு, ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பாவனையாளர்களுக்கு தற்போது மண்ணெய் விநியோகிக்கப்படுகின்றது. பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு நான்கு லீற்றர் மண்ணெய் ஒரு லீற்றர் 25 ரூபா விலையில் பிரஸ்தாப சங்கங்களின் கிளைகள் சிலவற்றில் விநியோகிக்கப்படுகிறது. (22)

## கண்டெடுப்பு

யாழ்ப்பாண பழைய பஸ் நிலையத்திற்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்ட பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்றும், பேர்ஸ் ஒன்றும் யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணைய அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என இணையத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டாக்காலி நாய் ஒழிப்பு

(தொல்புரம்)

வலிமேற்குப் பிரதேச சபையினால் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட வுள்ளது. இதற்கான பணிகளைத்

## பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்படும் "உளவளத்துணை" எனும் அறிமுகப் பயிற்சி நெறி இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்புத்துறை எழிலூர் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது இதில் பலரும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

## தொண்டா - செல்லா தனித்தனிக் கூட்டங்கள்

இ. தொ. கா. தலைவர் தொண்டமானும், பொதுச் செயலாளர் செல்லச்சாமியும் மலையகத்தில் தனித்தனி பொதுக் கூட்டங்கள் நடத்தி தமது கருத்துக்களை விளக்கி வருகின்றனர்.

இருவரும் தன்னிலை விளக்கங்களை மக்கள் முன் தெரிவிக்கின்றனர்.

## பாலர் பாடசாலைகளுக்கு சீரான பாடவிதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயம் இரண்டு கல்வித்திணைக்கள பகுதிகளில் இயங்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்களை ஒருங்கிணைந்து ஒரு சீரான பாடவிதானம் அமைக்கவும் அவர்களுக்கான பயிற்சி வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே பாலர் பாடசாலை ஆசிரியர்களையும் பெயர், தராதரம், பாடசாலையின் பெயர் மற்றும் சரியானமுகவரி, என்பவற்றை கல்விப் பணிப்பாளர், கல்வித்திணைக்களம், வலயம்-2, இருபாலை, கோப்பாய் என்ற முகவரிக்கு உடன் அனுப்பிவைக்கும்படி அதன் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## போஷாக்கற்ற சிறுவருக்கு விட்டமின் 'பி' கூட்டுசி

விடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் போஷாக்குக் குறைந்த சிறுவர்களுக்கான விட்டமின் பி கூட்டுசிச்சிகிச்சையை வழங்கி வருகின்றனர்.

நவாலிப் பகுதியிலுள்ள அகதி முகாம் சிறுவர்கள் 11 பேர்களுக்கும் குடாநாட்டின் மற்றொரு பகுதியில் 42 சிறுவர்களுக்கும் விட்டமின்பிகூட்டுசி சிகிச்சை விடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினரால் வழங்கப்பட்டுருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (22)

## களுதாவளையில் தமிழர் குடும்பத்துடன் விரட்டல்

மட்டக்களப்பு களுதாவளைப் பகுதியிலிருந்த புஷ்பராசா என்பவரின் குடும்பம் றைக் கடந்து பெரிய போரதீவுக் கிராமத்தில் கொண்டு போய் விடப்பட்டுள்ளனர்

உருவாவதற்கு அடிப்படைத் தேவையானதும் என்பதில் எதுவித கேள்விக்குமே இடமில்லை. ஏனெனில், இவை இல்லாது போனால், பேச்சுவார்த்தை நம்பிக்கை தருபவையாகவும், முன்னேற்றகரமானவையாகவும் இருக்கப் போவதில்லை.

பொருளாதாரத் தடை, தொடரும் இராணுவ நடவடிக்கைகள் மத்தியில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமானால், அதில் அவற்றின் பாதிப்புக்கள் பிரதிபலிப்பது தவிர்க்க முடியாது போகும். அதாவது, போர் சூழல் இருதரப்பில் எவருக்கும் பாதகமாகவும் அமையலாம்; சாதகமாகவும் அமையலாம். இந்நிலையில் பேச்சுவார்த்தையின் போது புதிய நிபந்தனைகள், புதிய கோரிக்கைகள் உருவாவதினால் சமாதானப் பேச்சுக்கள் முன்னேற்றம் அடையாது குழப்பம் அடைய நேரிடலாம்.

அத்தோடு, பொருளாதாரத்தடை, இராணுவ நடவடிக்கைகள் என்பது ஓர் அழுத்தத்தில் வைத்து பேச்சுவார்த்தைக்கு அழைப்பது போன்ற நடவடிக்கையாகும். இந்நிலையில், சுதந்திரமானதும், நம்பிக்கையானதுமான பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவது சாத்தியமானதொன்றாக இருக்கப் போவதில்லை.

மேலும், நடைபெறும் பேச்சுவார்த்தைகள், சமாதான முயற்சிகள் என்பனவற்றின் மீது மக்களுக்கும் நம்பிக்கை உருவாக வேண்டியது அவசியமாகும். ஏனெனில், கடந்த காலத்தில் மக்கள் சமாதான நடவடிக்கைகள் பேச்சுவார்த்தைகள் என்பனவற்றின்மீது நம்பிக்கை இழந்து போயுள்ளனர். இதற்கு வரலாற்று ரீதியாகவே தமிழ் மக்கள் சிங்கள அரசியல் தலைவர்களால் ஏமாற்றப்பட்டு வந்தமையே காரணமாகும். அத்தோடு, மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள சுமைகள் நீக்கப்பட்டு மக்கள் இயல்பு வாழ்க்கை கொள்ளும் சூழ்நிலையே பேச்சுவார்த்தைக்கு உகந்ததாகும்.

இந்நிலையில், இராணுவ நடவடிக்கைகள், பொருளாதாரத்தடை நீக்கம் என்பனவற்றை அரசாங்கம் மேற்கொள்வதன் மூலம் ஒரு சகஜ நிலையையும், சமாதான சூழ்நிலையையும் உருவாக்க முன்வரவேண்டும். அதன் மூலம் பேச்சுக்கான சூழ்நிலையையும் சமாதான முயற்சிகளில் மக்களுக்கு நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதே பேச்சுவார்த்தையில் பயன் தரக் கூடிய தீர்வுகளை எட்டமுடியும்.

இவற்றின் காரணமாக, சமாதான நல்லெண்ணத் தூதுக்குழுக்களிடம் விடுதலைப்புலிகள் விடுத்துள்ள கோரிக்கைகளை அரசாங்கம் திறந்த மனத்துடன் பரிசீலிக்குமானால் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பதில் முன்னேற்றகரமான நிலையை எட்டமுடியும். இதைத் தவிர்த்து இதனை பேச்சுவார்த்தைக்கான நிபந்தனை எனக் காட்ட அரசு முற்படுமானால் அது சமாதானத் தீர்விற்கு திட்டமிட்டு முட்டுக்கட்டை போடுவதாகவே கருத முடியும்.

---

2-வது ,, அன்ரனக்குயின் குருநகர் [illegible]
3-வது செல்வி மாலதி தர்மகுலசிங்கம் அரியாலை சரஸ்வதி ச. ச. நிலையம்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் யாவும் எதிர்வரும் 27-2-94 ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்படும் எனச் சமாசச் செயலாளர் திரு. அ. க. ஏனெஸ்ற் அறிவித்துள்ளார். (24)

களை ஒழிக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான பணிகளைத் தொடர யாழ். மாநகரசபையினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டு கூடிய விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (41)

மட்டக்களப்பு களுதாவளைப் பகுதியிலிருந்த புஷ்பராசா என்பவரின் குடும்பம் சிறிலங்கா இராணுவத்தினரால் அப் பகுதியிலிருந்து விரட்டப்பட்டுள்ளது. இக் குடும்பத்தினர் பிரதான ஆற்றைக் கடந்து பெரிய போரதீவுக் கிராமத்தில் கொண்டு போய் விடப்பட்டுள்ளனர். கடந்த 29 ஆம் திகதி. இச்சம்பவம் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

# காஷ்மீர் பற்றி அமெரிக்க கருத்திற்கு இந்தியா கடும் கண்டனம்

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில காணப்படும் நிலைமையை ஆப்கானிஸ்தானில் காணப்படும் நிலைமையுடன் ஒப்பிட்டு அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளமையை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளது.

புதுடில்லியிலுள்ள வெளியுறவு அமைச்சக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் பாகிஸ்தானும், தீவிரவாதிகளும் மேலும் வன்செயல்களில் ஈடுபட இது தூண்டுகோலாக அமையும் என குறிப்பிட்டார்.

வாஷிங்டனில் அமெரிக்காவின் துணை வெளியுறவு அமைச்சர் ரபின் ரசெல் தெரிவித்த கருத்துக்கு எதிராக கருத்து வெளியிட்ட அரசஅதிகாரி மேலும் கூறுகையில் ஜம்முகாஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்பட ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து கூலிப் படைகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ஜம்முகாஷ்மீரில் தீவிரவாதிகளை பாகிஸ்தான் தொடர்ந்து தூண்டி வருவது தொடர்பாக இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் கவலை தெரிவித்து இருக்கின்றார்- தம்மைச் சந்தித்த பிரான்ஸ் நாட்டின் செனட்டர்களிடையே பேசிய அவர் பாகிஸ்தானுடன் உறவுகளை மேம்படுத்த இந்தியா முயன்று வருவதாகவும் தெரிவித்தார்.

# பாகிஸ்தானின் செயலுக்கு இந்தியா எதிர்ப்பு

(ஜாகர்த்தா)

காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச மன்றங்களில் எழுப்ப முயலும் பாகிஸ்தானின் செயலுக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்தோனேசியத் தலைநகர் ஜாகர்த்தாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் பாகிஸ்தான் பிரதிநிதி காஷ்மீர் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டுப் பேசியதற்கு பதிலளித்த இந்திய அமைச்சர் ஆர்.எல். பாட்டியா இருதரப்புரீதியில் பேசித்தீர்க்க வேண்டியதொரு பிரச்சினையை சர்வதேச அரங்கில் எழுப்புவதன் மூலம் பாகிஸ்தான் தனது உரிமையை துஷ்பிரயோகம் செய்வதாகத் தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தான் மற்றும் இந்திய அரசின் வெளியுறவு செயலர் நிலையிலான பேச்சுவார்த்தை அண்மையில் நடத்தப்பட்டதையும். இருதரப்பு பிரச்சினைகளை தீர்ப்பது பற்றிய இந்தியாவின் யோசனைகளையும் ஆர்.எல். பாட்டியா விளக்கமாக விபரித்தார்.

# விமான தாக்குதலுக்கு அங்கீகாரம்

(ஜெனிவா)

பொஸ்னியாவின் சரஜேவோ நகரைச் சூழவுள்ள சேர்பியர்களின் பீரங்கிப் படை நிலைகள் மீது நேட்டோ நாடுகளின் வான்படையினர் தாக்குதல் நடத்துவதற்கு தேவையான அதிகாரங்களை ஐ. நா. செயலாளர் நேட்டோ விமானப் படையினருக்கு வழங்கியுள்ளார்.

எனினும் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டால் அங்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஐ. நா. உதவிப் பணியாளர்களைப் பாதுகாப்பது கடினமானதாகலாம் என்று அமெரிக்க விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# உ. பி.யில்குழப்பம்ஏற்படுத்த பிரிவினை சக்திகள் முயற்சி

-முலாயம் சிங் யாதவ்

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் குழப்பத்தை ஏற்படுத்த சில பிரிவினைவாத சக்திகள் மேற்கொண்ட முயற்சியினாலேயே பதற்றம்ஏற்பட்டதாக மாநில முதல்வர் முலாயம் சிங் யாதவ் கூறியுள்ளார்.

சமேரி என்ற இடத்தில் அம்பேத்கார் நினைவுக்கட்டடம் ஒன்றை திறந்து வைத்தபின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் குறிப்பிடுகையில் பதற்றத்தைத் தணிக்க சகல நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இதனிடையே உத்தரப் பிரதேசத்தில் பதினைந்து பொலிஸ் பிரிவுகளில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு இன்னமும் அமுல்படுத்தப்படுகிறது என்பதுடன், மத்திய அரசின் துணை இராணுவ படைகளின் ஐந்து அணிகள் உள்ளூர் பொலிசாருக்கு உதவும் வகையில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

# வை. கோ விடுதலை

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் (கோபாலசாமி பிரிவு) பொதுச்செயலளரும், ராஜ்ய சபா உறுப்பினருமான வை. கோபாலசாமியும் அவருடன் கைது செய்யப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமானோரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய, மாநில அரசுகள் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை உயர்த்தியிருப்பதைக் கண்டித்து இவர்கள் நேற்று முன்தினம் சென்னையில் ஆர்ப்பாட்டம்செய்த போது கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

# வங்காள இளைஞர் மீது லண்டனில் கறுப்பர் தாக்கு

(லண்டன்)

லண்டனில் வங்காள இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட இனக்குரோத தாக்குதல் குறித்து விசாரணை நடைபெறுவதாக லண்டன் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

கிழக்கு லண்டனில் முக்தார் அகமது (வயது 18) என்ற மாணவர் கறுப்பு இன இளைஞர்களால் தாக்கப்பட்டார் என்று பொலிஸ் கூறுகிறது.

இந்தத் தாக்குதலின் பின் ஐந்துபேர் கைதுசெய்யப்பட்டார்கள். அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

முக்தார் அகமதுவின் மண்டை உடைந்து அவர் மயக்கமுற்றுக் கிடந்தார் என்று பொலிஸ் தெரிவிக்கின்றது. அவர் சுயநினைவுக்குத் திரும்பியுள்ளார்.

---

**பனை வளம் பெருக்கி**

**மனை வளம் காப்போம்**

# லெபனானில்30000பேருக்கு வேலை; ஏரிக்கரை பத்திரிகைகளின் புரட்டு

## உல்லாசப்பயண அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காத் தொழிலாளர் 30,000 பேருக்கு லெபனான் நாட்டில் வேலை வாய்ப்பை வழங்குவது தொடர்பாக எந்தஒரு பேச்சுவார்த்தைகளும் நடைபெறவில்லை. லெபனான் நாட்டில் வேலைசெய்யும் சிறிலங்கா மக்கள் பல துன்பங்களை அனுபவிப்பதை தான் நேரில் கண்டதாக உல்லாச பயண அமைச்சர் காமினிலொக்குகே சந்தேசிய வானொலிக்கு தெரிவித்தார்.

தான் லெபனான் பயணம் மேற்கொண்டபோது மேலதிக உல்லாச பயணிகள் சிறிலங்காவுக்கு வரவழைப்பது தொடர்பாகவே பேசியதாகவும், தொழில் விடயமாக பேசவில்லை என்றும் இதனை திரிபுபடுத்தியே ஏரிக்கரை பத்திரிகைகள் தெரிவித்தது என்றும் இது தொடர்பாகப ஆட்சேப கடிதத்தை அனுப்பியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

லெபனான் நாட்டவர் சிறீலங்கா தொழிலாளர்களை பெரிதும் விரும்புவதாக மட்டுமே தான் பத்திரிகைக்கு தெரிவித்ததாகவும், ஆனால் தற்போது அங்கு படும் கஷ்டங்களினால் பலர் சிறீலங்கா திரும்புவதாகவும் எனவே தான் இன்னும் பலரை அதில் கஷ்டபடுத்த விரும்பவில்லையென்றும் தெரிவித்தார்.

# 3- வதுடெஸ்ட்போட்டியிலும் சிறீலங்கா இனிங்ஸ் தோல்வி

(டில்லி)

சிறீலங்கா, இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ற் போட்டியிலும் இன்னிங்ஸ் தோல்வி கண்டுள்ளது. இந்தியா சிறீலங்காவை ஒரு இன்னிங்ஸ் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற மூன்றாம் டெஸ்டின் நான்காம் நாள் ஆட்டத்தின்போது சிறீலங்கா இரண்டாவது இன்னிங்ஸில் 222 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்தியா முதல் இன்னிங்ஸில் 358 ஓட்டங்கள். சிறீலங்கா முதல் இன்னிங்ஸில் 119 ஓட்டங்கள். இரண்டாவது இன்னிங்ஸில் 222 ஓட்டங்கள்.

இந்த போட்டித் தொடரில் இந்திய கிரிக்கெட் குழுவின் தலைவர் அசாருதீன் சிறந்த ஆட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார்.



## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி துஷ்யந்தா குபேந்திரன்

நீகன் நகரைச்சேர்ந்த குபேந்திரன் சுகந்தா தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி துஷ்யந்தா தனது முதலாவது பிறந்த தினத்தை 13-02-94 இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா,

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது. போட்டியில் பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இவ் இறுதிநாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா அவர்கள் கலந்துகொள்வார்.

## தென்மாகாண

உறுப்பினர் காலிங்க ஒபேவன்ச பலப்பிட்டிய தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவேறுஒருவரைஅப் பதவிக்கு நியமனம் செய்யப் பட்டுள்ளது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சி பிரேமதாசா ஆதரவாளர் மிகுந்த ஆத்திரம் அடைந்து காணப்படுவதாக தெரிய வருகின்றது.

## மின்

கலந்துகொண்டனர். மின் பிறப்பாக்கியை ஈ என் ரி நிபுணரும் மின்பிறப்பாக்கி பரா

## முத்திரைக்கு பொருள் விநியோகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இதுவரை வழங்காதிருந்த 1993 ஆம் ஆண்டு ஏப்ரல், யூலை மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைக்கான உணவுப்பொருள்களைவழங்கவுள்ளது. இப்பொருள்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டுமென அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அத்தோடு இச் சங்கம் அட்டைக்கு 4லீற்றர் மண்ணெண்ணெயையும் வழங்கிவருகிறது. (யோ)

## முதன்மை

திகதி வரை ஏற்கப்படும் எனவும் எதிர்வரும் 25ஆம் திகதி பரீட்சையும், நேர்முகப் பரீட்சையும் நடத்தப்படும் எனவலயம் இரண்டிற்கான கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## உட்கட்சி

குள் பெரும் சர்ச்சைகள் எழுந்துள்ளதாகவும் இவற்றை சீர் செய்யும்முயற்சியில் ஜனாதிபதி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். விஜேதுங்கா கட்சியில் தொடர்ந்தும் இருந்து வருபவர்களைவிட காமினி திஸநாயக்கா, ரொனிடிமெல், அநுரா பண்டாரநாயக்கா,ஒசி அபேகுணசேகர ஆகியோரையே முழுமையாக நம்புவதாகவும் குறிப்பிட்ட அவர் ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடுகளால் கட்சிக்குள் பெரும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் கட்சி பிளவுறும் நிலை உருவாகி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி

தேர்தலில்டி.பி. விஜேதுங்கா ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிடுவதாக இருந்தபோதும் இவருக்கு எதிராக ஐ.தே. கட்சியில் செல்வாக்குள்ள ஒருவரை கட்சியின் ஆதரவுடன் அல்லது வேறு வழியில் போட்டியிட வைப்பது குறித்து அக்குழுவினர் ஆராய்ந்து வருவதாகவும் புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இதற்கென சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரும் செயலாளருமான சிறிசேன கூரேயை நீக்கிவிட்டு முன்னாள் நிதியமைச்சர் திரு. ரொனிடிமெல்,

## மாடு திருடியவர் காவல்துறையிடம் சிக்கினார்

(வடமராட்சி)

மாடு திருடிய ஒருவர் பருத்தித்துறை காவல் துறையினரிடம் வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் ஒன்று பருத்தித்துறையில் நடைபெற்றது.

நிலானி இராமநாதன் என்ற பெண்மணியின் 15ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டை மாதங்கி வீதியைச் சேர்ந்த ஐம்பியையா கமலேந்திரன் என்பவர் திருடியதையடுத்து காவல் துறையினரிடம் பிடிபட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றம் மாடு திருடிய இந்நபரை குற்றப் பணமாக இரண்டாயிரம் ரூபாவும், இழப்பீடு15ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு கட்டளையிட்டது. (யோ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை மாலை 2.00 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதன்போது அன்னை பூபதி பொதுஅறிவுப்போட்டி, கழக ஆசிரியர் விடயங்கள், விளக்கு சஞ்சிகை விடயம் மற்றும் கல்வி மேம்பாட்டுக் கழக நிதியம் ஆகியனபற்றி கலந்துரையாடப்பட விருப்பதால் சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பரிசளிப்பு விழா

சுவாமி விவேகானந்தரின் அனைத்து மத மாநாட்டுச் சொற்பொழிவின் நூற்றாண்டு பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் எதிர்வரும் செவ்வாய் பி: ப. 3 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறும்.

## பேச்சுப் போட்டி

நல்லூர் கல்விக்கோட்ட பாடசாலைகளிடையிலான 'விவேகானந்தர் சிக்காக்கோ நினைவுப்பேருரை' பேச்சுப் போட்டிகள் இந்துமகளிர் கல்லூரியில் எதிர்வரும் புதன்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும் என நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## 3 கொள்ளையர்

அப்புலிங்கம், மகாலிங்கம்

## விறகு ஏலவிற்பனை

பருத்தித்துறை நீதிமன்றில் இரண்டு வழக்குகளில் சான்று பொருளாகவந்தவிறகு வெகு விரைவில் பருத்தித்துறை நீதிமன்ற வளவில் ஏலத்தில் விற்கப்படுமென நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.

## ஓராண்டு நினைவலைகள்





திருஞானி ஆதிபரம்

தோற்றம்: 18 8-1939 மறைவு: 24-2-1993

செல்வி அப்புச்சாமி கண்ணம்மா

தோற்றம்: 2-7-1943 மறைவு: 08 2-1993

பண்பின் பிறப்பிடமே
பாசத்தின் திருவுருவே
ஐயாவே! எங்கள் ஆதிபரமே
அழுகின்றோம் உம் பிரிவால்
நீங்கள் தீயுடன் சங்கமமானாலும்
நீங்காது உங்களது நினைவலைகள்

உங்கள் ஆத்மாக்கள் சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

அக்கரை
தொண்டைமானாறு.

(7497)

## கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



முதலாவது பிறந்த தினத்தை 13-02-94 இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மாமார், அம்மப்பாமார், அப்பம்மா, அப்பப்பா, அத்தைமார், சித்தப்பா, சித்திமார், சுகி அன்ரி, மாமாமார், மற்றும் உற்றார், உறவினர்கள் ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

நீகன் நகர், (7512)
நாவாந்துறை.

---

தமிழீழ மண்ணில்
அறிவியல் உலகம் படைக்க
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின்
மாணவர்

## அறிவியல் கழகம்

இணுவிலில் தனது செயற்பாட்டை

**1994- 02- 16**

மாலை 3. 00 மணிக்கு ஆரம்பிக்கின்றது

-விடுதலைப்புலிகள்
மாணவர் அமைப்பு

(7515)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**12.02.1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 760
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-4170, 40-2394, 42-0962, 42-3964, 41-9396, 43-0916, 40-5216, 41-9663, 28-5039, 28-7367, 24-3258, 27-8125, 24-9490, 27-9466, 28-4550, 28-1706, 26-1523, 27-9764, 27-8751, 26-0711, 26-6077, 28-1111, 24-7084.

வடபகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

24-5177, 24-4390, 22-7862, 27-2004, 24-5121, 26-6361, 42-3615, 26-2681, 24-4664, 24-6475, 26-3638, 24-6316, 27-6579, 26-5848, 24-4238, 42-6511, 26-0763, 24-4875 42-2317.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

ணரும் மின்பிறப்பாக்கி பராமரிப்பு பொறுப்பாளருமானவர் இயக்கி வைத்தார்.

### மீனவர்

களிலிருந்து பொன்னாலை, மூளாய் பகுதிகளைநோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டபோது அவ் எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த வயல்வெளிகளில் வீழ்ந்து வெடித்தன. (41)

---

றொனிடிமெல், முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்க ஆகியோருக்கு முக்கிய இடங்களை வழங்குவது குறித்துஆராய்ந்துவருகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

### சமாதானத்தின்

இவ் விழாவில் மேற்படி கல்லூரியின் அதிபரும் உரை நிகழ்த்தினார், தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க, நி)

---

ஆகியோரே இக் கொள்ளையில் ஈடுபட்டவர்களாவர். இவர்கள் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதினால் தலா 1500 ரூபா அபராதமும், தலா 2970 ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் நீதியாளர்கள் உத்தரவிட்டனர்.

இக்கொள்ளையர்கள் அவ் வலுவலகத்தில் இருந்து 8 ஆயிரத்து 758 ரூபா பெறுமதியான பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர். (யோ)

---


## தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப் படங்களை காலாகாலம் நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு கொடுக்கப்படும் முன்னணி நிறுவனம்

# படமாடம்

சகலவிதமான பூக்கண்ணாடி வகைகள்
சாதாரண கண்ணாடி வகைகள்
சாமிப்படங்கள், மீன் தொட்டிகள்,
இனிப்பு கண்ணாடி பெட்டிகள்
கோல்ட் பிறேம் சட்டங்கள் (Gold Framing)
கோல்ரேப் வகைகள்
❋ கண்ணாடி ஒட்டும் பசை (Silicone) (சிலிக்கோன்)
❋ மல்ரி பொண்ட், கிறிப்ஸ்
❋ பூட்டு

இப்பொழுது மேற்குறிப்பிட்ட சகல பொருட்களையும் சகலவிதமான படங்களை சட்டமிட்டு பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# படமாடம்

அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: தைப்பொங்கல் நாளிலிருந்து சகலவிதமான கண்ணாடி வேலைகளும், படம் பிறேம் போடுவதும் நியாய விலையில் செய்து கொடுக்கப்படும்.

(சி-8616)


---



## நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்

16-01-94 இல் அமரத்துவமடைந்த அமரர் நாகலிங்கம்-சிவசுப்பிரமணியம் (உரிமையாளர், கலைவாணி நகைமாளிகை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் மனைவி, மக்கள் துயருற்று இருந்த வேளையில் அனுதாபம் தெரிவித்துஆறுதல்கூறியதுடன் பல வழிகளிலும் உதவி புரிந்தும், மலர் வளையங்கள் சமர்ப்பித்தும் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட உறவினர்கள், யாழ். நகை வர்த்தகர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டி வில்லூன்றித் தீர்த்தக் கரையில் இன்று (13-02-94) இடம்பெறும். வீட்டுக்கிருத்தியம் அன்னாரது இல்லத்தில் 15-02-94 செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

136|1, நாவலர் வீதி, மனைவி,
யாழ்ப்பாணம். பிள்ளைகள், மருமக்கள்,
(7513) அன்புப் பேரன்

---

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
இராஜேஸ்வரி செல்லத்துரை
(கோண்டாவில் இந்து மகாவித்தியாலய ஆசிரியர்)

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

கோ. இ. ம. வி. பழைய மாணவர்கள்
(7516)